# நெறிமுறைகள்

இட்ஸ் காஷ் கார்டு லிமிடெட் ("ஐசிசிஎல்") பொருந்துகின்ற சட்டங்கள், விதிமுறைகளுக்குட்பட்டதாகவும் வர்த்தக நெறிகள் மற்றும் ஒழுங்கு அம்சத்தில் உயர்தரத்தை தக்க வைப்பதான வர்த்தகத்தை நடத்துவதற்கான உறுதியை கொண்டுள்ளது.

ஐசிசிஎல் தனது நிறுவன மற்றும் பங்குதாரர்கள் எதிர்பார்க்கும் தரநிர்ணயங்களை, நிறுவன இயக்குனர்கள் மற்றும் ஊழியர்கள் அறிந்துகொள்ள மற்றும் கடைபிடிக்க மற்றும் செயல்படுத்த வேண்டிய வழிமுறைகளை நெறிமுறைகளாக தொகுத்தளிப்பது அவசியம் என உணர்கிறது.

இந்த நெறிமுறைககளின்படி நிறுவனத்தின் இயக்குனர்கள் மற்றும் பணியாளர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகரரத்தின் எல்லைக்குட்பட்டு நிறுவனத்தின் மற்றும் பங்குதாரர்களின் சிறப்பான நலனை முன்னிட்டு தகவலளிக்கப்பட்ட முடிவுகள் மற்றும் கொள்கைகளை வடிவமைத்து செயல்படுத்துவதற்கு கடமைபட்டுள்ளனர்.

இந்த உறுதியினை ஆதரிக்கும் விதமான வர்த்தக நடைமுறை மற்றும் செயல்முறை கொள்கைகளை இந்த நெறிமுறை பிரதிபலிக்கின்றது. இந்த நெறிமுறையின் தரநிர்ணயங்களை தக்கைவப்பது மேலும் சட்ட மற்றும் மேம்பாடு முறைப்படுத்தலிற்கு உரிய விதமாக இந்த நெறிமுறைகளை பராமரிப்பது ஆகிய பொறுப்புகள் இயக்குனர் குழுவை சாருகிறது.

இந்த நெறிமுறை ஒழுங்கு பிரச்சனைகளை அடையாளம் காண மற்றும் அவற்றை சீர்செய்ய வழிமுறைகளை அளிப்பதற்கான மேலும், உண்மை மற்றும் நம்பகத்தன்மைக்கான ஒரு சூழ்நிலையை வளர்க்க உதவும் நோக்கம் கொண்டுள்ளது. ஒவ்வொரு இயக்குனர் மற்றும் ஊழியர் தனது கடமைகள், செயல்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியவையை செயல்படுத்துவதில் இந்நெறிகளின் பொருந்தும் தன்மைகள் அறிந்து கொள்வதற்கு இந்நெறியை படித்து புரிந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது

அனைத்து இயக்குனர்கள் மற்றும் பணியாளர்கள் இந்த நெறிமுறைகளை நன்றாக அறிமுகப்படுத்திக் கொண்டு அதன்படி செயல்பட வேண்டும். இந்த நெறிமுறைகளுக்கு ஏற்றவாறு செயல்படத் தவறுவது அத்துமீறல்களை மேற்கொள்ளும் நபர் மற்றும் அவருக்கு ஆதரவாக இருப்போருக்கு எதிராக தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நெறிமுறைகளில் பட்டியலிடப்பட்டுள்ள தரநிர்ணயங்கள் பொதுவானவை. மேலும் இயக்குனர்கள் மற்றும் பணியாளர்களுடைய ஒவ்வொரு அம்சங்களுக்காக விவரிக்கப்படவில்லை. அவ்வம் சூழ்நிலைகளில் இந்நெறிமுறைகள் பொருந்தும் தன்மை மற்றும் வழிகாட்டுதலை இயக்குனர் குழுவிடம் நாடிக் கொள்ள வேண்டும்

அனைத்து இயக்குனர்கள் மற்றும் பணியாளர்கள் இந்த நெறிமுறைகளை நன்றாக அறிமுகப்படுத்திக் கொண்டு அதன்படிசெயல்பட வேண்டும். இந்த நெறிமுறைகளுக்கு ஏற்றவாறு செயல்படத் தவறுவது அத்துமீறல்களை மேற்கொள்ளும் நபர் நெறிமுறைகளின் செயல்பாட்டிற்கு நிறுவனம் நிறுவனச்செயலரை தனி அதிகாரியாக நியமிக்கின்றது. இவர் இயக்குனர்கள் மற்றும் பணியாளர்களின் வினாக்களுக்கு சரியான விடையளிப்பதோடு நெறிமுறைகளின்படி செயல்பட

உதவி செய்வார். தனி அலுவலர் பெறுகின்ற புகார்கள் தணிக்கைக் குழுவின் தலைவரிடம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

## பொருந்தும் தன்மை

அ. இந்த நெறிமுறைகள் நிறுவனத்தின் அனைத்து இயக்குனர் குழு உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பொருந்தும்.
ஆ. இந்த நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகள் பொதுப்படையானவை. குறித்த அறிவுறுத்தல்களை அறிய நிறுவனத்தின் அவ்வம் பொருந்தும் கொள்கைகளை மறுபார்வையிடுமாறு இயக்குனர்கள் மற்றும் பணியாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தேகங்களிற்கு விளக்கம் பெற தனி அலுவலரை நாடலாம்.
இ. இந்த நிறுவனம் பட்டியலிடப்பட்ட நிறுவனமாக இல்லாததால் சில தேவைகள் கட்டாயமானதல்ல. இந்த தேவைகள் தற்போதைய சூழ்நிலையில் மிகவும் அதிகமாக எதிர்பார்ப்பதாக அமைகிறது.

## விளக்கம்

இந்த நெறிமுறைகளில் வேறுவிதமாக குறிப்பிடாதவரைக்கும்

அ. ஒருமையில் குறிக்கப்படுகின்ற நபர்கள், பன்மைக்கும் மற்றும் பன்மை ஒருமைக்கும் பொருந்தும்
ஆ. ஆண்பால், பெண்பால், நடுவுநிலையாக குறிக்கப்படுகின்ற அனைத்து விஷயங்கள் அனைவருக்கும் பொருந்தும் என கொள்ளப்பட வேண்டும்.

## 1. பொதுவான நெறிமுறைகள்

அ. ஐசிசிஎல் தான் செயல்படும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தனது ஈடுபாட்டினை உறுதிபடுத்தியுள்ளது. ஐசிசிஎல் தான் செயல்படும் எந்த நாட்டிலும் பொதுமக்கள், சமுதாயத்தின் நலனிற்கு பாதகம் ஏற்படுத்தும் எந்த ஒரு திட்டம் அல்லது நடவடிக்கையை மேற்கொள்ளாது. ஐசிசிஎல் மேலாண்மை செயல்பாடுகள் வர்த்தக நடைமுறைகள் அவ்வம் நாடு, பிராந்தியங்கள் மற்றும் சமுதாயத்திற்கு இயன்றவரை மற்றும் செலவழிப்பு சக்திக்கு உட்பட்டதாக நன்மை விளைவிக்கும் நோக்கத்துடன் செயல்படுகிறது.

ஆ. ஐசிசிஎல் தனது வர்த்தகத்தை செயல்படுத்தும் நாடுகளில் அவ்வம் நாடுகளில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வழிகாட்டுதல்கள், கொள்கைகள், தரநிர்ணயங்கள், சட்ட மற்றும் நெறிமுறைகள் ஆகியவைகளுக்கு ஏற்ற விதமாக தனது கணக்கு வழக்குகள் மற்றும் நிதியறிக்கைகளை தரநிர்ணயங்களை உண்மையான மற்றும் நியாயமான விதத்தில் ஆயத்தப்படுத்தி பராமரிக்கும். நிறுவனத்தின் உள் கணக்கு பராமரிப்பு மற்றும் தணிக்கை ஆகியவைகளை நிறுவனத்தின் வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சொத்து பராமரிப்பு ஆகியவை பிரதிபலிக்கும் விதமாக உண்மையான மற்றும் நியாயமான விதத்தில் தக்கவைக்கப்படும் மேலும் கொடுக்கல் வாங்கல்கள் மறைவின்றி உண்மையாக செயல்படுவதற்கு நிறுவன வாரியம் மற்றும் பங்குதாரர்களு உத்திரவாத உறுதியளிக்கத்

தேவையான கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்த வேண்டும். அனைத்து தேவையான தகவல்களும் நிறுவன தணிக்கையாளர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் அரசாங்க முகவர்களுக்கு கிடைக்குமாறு இருத்தல் வேண்டும். குறிப்பேடுகள் மற்றும் ஆவணங்களில் கொடுக்கல் வாங்கல்களில் எவ்வாறான தவறுகள் விடுபட்டவைகள் மற்றும் முன்தொகை கணக்கில் சேர்ப்பு மற்றும் மறைக்கப்பட்டுள்ள வங்கி கணக்கு அல்லது நிதிகள் அறிந்த விதமாக நடைபெறுதல் கூடாது. உள் நோக்கத்துடன் செயல்படுகின்ற எந்த ஒரு தவறான நிதி கணக்குகளில் தவறான பொருள் பிரதிநிதித்துவத்தோடு அல்லது தனித்த தவறான தகவல் அல்லது தவறான அறிக்கை ஆகியவை நெறிமுறைகளின் அத்துமீறலாகக் கருதப்படுவதோடு தவறு செய்தோர் மீது உரிய சட்டங்களிற்கு உட்பட்ட சிவில் அல்லது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எந்த ஒரு பணியாளரும் முறையற்ற பணம் செலுத்துவது, தரகு அல்லது கையூட்டு தருவது ஆகியவைகளில் ஈடுபடுவதோ அல்லது அனுமதி வழங்கவோ கூடாது.

இ. ஐசிசிஎல் போட்டிகரமான திறந்தவெளி சந்தை மற்றும் அதன் செயல்பாட்டை முழுமையாக ஆதரிக்கிறது. ஐசிசிஎல் எந்த ஒரு தனி நிறுவனமும் சந்தை நிலவரத்தை ஆக்கிரமிக்குமாறான வரையறைக்கப்பட்ட வர்த்தக நடைமுறைகள் மற்றும் நடவடிக்கைகள மற்றும் நியாயமற்ற வர்த்தக முறைகளை பின்பற்றாது. ஐசிசிஎல் தனது உற்பத்தி பொருட்கள் மற்றும் சேவைகளை போட்டிகரமான திறந்தவெளி சந்தையில் அவற்றின் பலத்தின் அடிப்படையில் விளம்பரப்படுத்தும் மேலும் போட்டியாளர்களின் பொருட்கள் மற்றும் சேவைகளை நியாயமற்ற மற்றும் தவறாக வழிகாட்டும் வாசகங்களை வெளியிடுவது போன்றவைகளில் ஈடுபடுதல் கூடாது. போட்டியளர் தகவல் வர்த்தகத்தின் இயல்பான போக்காக சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட ஆதாரங்கள் மற்றும் தடங்கள்மூலமாக மட்டுமே பெறப்பட வேண்டும்

ஈ. ஐசிசிஎல் பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்களின் தகவல் தேவைகளை மதிக்கிறது. நிறுவன மற்றும் வர்த்தக தகவல்கைள பொது தொகுதிகளான ஊடகம், நிதி சமுதாயம், பணியாளர்கள் மற்றும் பங்குதாரர்கள் ஆகியோரிடம் வெளிப்படுத்தும் போது ஐசிசிஎல் குறிப்பாக அங்கீகரிக்கப்பட்ட இயக்குனர் மற்றும் பணியாளர்கள் மூலமாக மட்டுமே பிரதிநிதித்துவம் செய்யப்பட வேண்டும். நிறுவனத்தின் தகவல் வெளியிடும் முழு பொறுப்பு இந்த அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளை சாரும்

உ. ஐசிசிஎல்லின் பெயர், குறியீடுகள் மற்றும் அடையாளச்சின்னம் ஆகியவை குறிப்பேடுகள், சங்கேத குறிகள் மற்றும் ஒப்பந்தங்கள் மூலமாக நிர்வகிக்கப்படும். எந்த ஒரு மூன்றாம் நபரும் தமது நலனிற்காக ஐசிசிஎல்லின் குறியீடுகள் மற்றும் அடையாளச்சின்னம் ஆகியவைகளை ஐசிசிஎல்லின் குறித்த அனுமதியின்றி பயன்படுத்தக் கூடாது.

2. இயக்குனர்கள் / வாரிய உறுப்பினர்கள் செயல்பாட்டு விதிகள்

அ. இயக்குனர்கள் / வாரிய உறுப்பினர்கள் அனைத்து வாரிய/கமிட்டி கூட்டங்களில் தவறாது கலந்து கொள்ள வேண்டும், மேலும் ஒரு வேளை பங்கேற்க இயலாத சூழ்நிலையில் முன்கூட்டியே தலைவர் அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும். ஒரு வேளை ஒரு குறிப்பிட்ட

இயக்குனர் தாம் தொடர்ந்து பல கூட்டங்களில் கலந்து கொள்ள இயலாது மேலும் தமது கடமைகளை நிறைவு செய்ய இயலாது என முன்கூட்டியே அறிந்திருப்பின் அந்த இயக்குனர் தாம் பதவியில் தொடர்ந்து இருக்க வேண்டியதைப்பற்றி பரிசீலனை செய்ய வேண்டும் மேலும் அவர் தனது இடத்தில் மாற்று இயக்குனரை நியமிக்கலாம். கூட்டத்திற்கு வருமுன் உறுப்பினர்கள் கூட்டத்தின் அறிவிப்போடு இணைத்து வைக்கப்பட்டிருந்த நிகழ்ச்சி நிரல் மற்றும் கூட்டத்திற்கு வருமுன் உறுப்பினர்கள் கூட்டத்தின் தொடர்புடைய ஆவணங்களை நன்றாக படித்து புரிந்து கொண்டிருக்க வேண்டும் மேலும் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளத் தேவையான ஆயத்தத்தோடு பங்கேற்கவேண்டும். உறுப்பினர்கள் வாரியத்தின் பேச்சுவார்த்தைகளில் இயல்பாக மற்றும் ஆக்க பூர்வமாக பங்கேற்க வேண்டும் மேலும் வாரியம் எவ்வாறு நிர்வகித்து செயல்பட வேண்டும் என்பதற்கான வழிமுறைகளை பின்பற்ற வேண்டும். வாரியம் அவ்வப்போது குறித்த நிபந்தனைகளுக்குட்பட்டு கமிட்டிகளை உருவாக்கலாம். வாரியத்தினால் நியமிக்கப்பட்ட கமிட்டி உறுப்பினர்கள் கமிட்டியின் அனைத்து கூட்டங்களில் பங்கேற்று கமிட்டியின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பிரச்சனைகள் அல்லது விஷயங்களின் தீர்வினை உரிய கால நேரம் மற்றும் வடிவத்தில காணுவதை உறுதிபடுத்த வேண்டும்

தற்போது வாரியம் இரண்டு கமிட்டிகளை உருவாக்கியுள்ளது.

தணிக்கை கமிட்டி
சம்பள கமிட்டி

**ஆ. வாரிய கூட்டங்களின் செயல்பாடுகளில் இயல்பான பங்கேற்பு**

உறுப்பினர்கள் வாரியத்தின் கூட்டங்களில் இயல்பாக பங்கேற்று தொலைநோக்கு பார்வையோடு தலைமையேற்று வர்த்தகத்திற்கு ஆக்கபூர்வமான பங்களிப்போடு நிறுவனத்திற்கு வழிகாட்டுதலை அளித்து பங்குதாரர்களின் தேவைகளை நிறுவனம் நிறைவு செய்கிறதை மற்றும் நிறுவனம் சட்ட மற்றும் ஒழுங்கு தேவைகளை நிறைவேற்றுவது ஆகியவைகளை உறுதிபடுத்தவேண்டும். இயக்குனருக்கு செயல்பாட்டு பொறுப்பை அளிக்கப்படுகையில், அவர் தனது வர்தக பொறுப்பை செயல்படுத்துகையில் நேர்மையாக, நன்னம்பிக்கை மற்றும் நிறுவன மற்றும் சக உறுப்பினர்களின் சிறப்பான நலன் கருதி செயலபடல் மற்றும் தனது பணியை கவனமாக மற்றும் திறமையாகவும் ஒப்பிடக்கூடிய சூழ்நிலைகளில் திடமாக பணிபுரியக்கூடிய நபருக்கு ஒத்ததாக இருக்க வேண்டும். செயல்பாட்டு நிர்வாகத்தை தனித்து செயல்பட அனுமதிக்கும் அதே வேளையில் நிர்வாக மற்றும் வர்த்தகத்தை மேற்பார்வையிடுவது இவர்களின் பொறுப்பாக அமைகிறது.

**இ. சில அறிக்கைகள / நிறைவேற்றல்களை மறறுபார்வையிடும் கடமை**

இயக்குனர் வாரியம் வரையறுக்கப்படுகின்ற காலகட்டங்களில் நிறுவன விஷயங்களின் அவ்வப்போது சில அறிக்கைகள் / நிறைவேற்றல்களை மறுபார்வையிடும் பொறுப்பை கொண்டுள்ளது. இவ்வாறான அறிக்கைகள் நிறைவேற்றல் அறிக்கைகளின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. வாரியம் தாம் கருதும் விதமாக அரசு விஷயங்களுக்ககா சமர்பிக்கக்கூடியவைக்கு ஏற்றதாக மற்றும் நிறுவனத்தின் சுமூகமான செயல்பாடுகளை உறுதிபடுதுவதற்காக மேலும் சிலவைகளை சேர்த்துக் கொள்ளவோ அல்லது திருத்திக் கொள்ளவோ செய்யலாம். 1956 நிறுவனச்சட்டத்தின்படி ஏதுமிருப்பின் அரசு சமர்ப்பிப்பு அறிக்கை

தேவையான அறிக்கைகளோடு காலாண்டு மற்றும் வருடாந்திர நிதியறிக்கை விவரம் வருடாந்திர செயல்பாட்டு திட்டம் மற்றும் நிதி ஒதுக்கீடு பணிபரியும் மற்றும் பணிபுரியாத இயக்குனர்கள் மற்றும் பணியாளர்களுக்கான சம்பள கொள்கை உள்நபர் வர்த்தகத் தடுப்பு, வாரியம் மற்றும் பணியாளர்களின் நடத்தை, அங்கீகார கொள்கை இதரவைகளுக்கான உள் நெறிமுறைகள் செயல்படுத்தல் மற்றும் மறுபார்வையிடல்

**ஈ. தொடர் வெளிப்பாடுகள்**

நிறுவனச் சட்டப் படி ஒப்பந்தங்களை பட்டியலிடுதல் மற்றும் வேறு பொருந்தும் விதிகளின் படி இயக்குனர்கள் சீரான கால இடைவெளியில் அல்லது, ஏற்கனவே அவர்களால் அளிக்கப்பட்ட தகவல்களிற்கு பிறகு ஏற்பட்டுள்ள மாற்றத்தின் காரணமாக சில தகவல்களை நிறுவனத்திற்கு அளிக்க வேண்டும்.

**1. பிற நிறுவனங்கள் மீதான தமது ஈடுபாட்டை தெரிவித்தல்**

இயக்குனர் வாரியம் நிறுவனச் செயலரை நியமிக்கும். அவரது நியமிப்பிற்கு பிறகு வரையறுக்கப்பட்ட காலங்களில் நிறுவனச் செயலர் கேட்கும் போது மற்றும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழும் போதும் இயக்குனர் தனது பணி விவரம் பிற வர்த்தக ஈடுபாடுகள் மற்றும் அவர்தானாகவே மற்றும் அவரது உறவினர்கள் வழியாக ஈடுபட்டிருக்கும் வர்த்தகங்களின் பட்டியலை அளிக்க வேண்டும்

**2. சில கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தல்**

நிறுவனம் மற்றொரு நிறுவனத்தோடு ஒப்பந்தம் மேற்கொள்கையில் நிறுவனத்தின் இயக்குனர்கள் இரண்டாம் நிறுவனத்தில் விருப்பம் கொண்டிருப்பின் இயக்குனரின்ஆதரவு அல்லது அவரது அந்த நிறுவனத்துடனான தொடர்பு தகவல் வாரியத்திற்கு உடனடியாக தெரிவித்திடல் வேண்டும். மேலும் ஆண்டு நிதியறிக்கைகளில் இவற்றை வெளிப்படுத்த வேண்டும்

3. **தாம் ஈடுபட்டுள்ள பிற நிறுவனங்களின் கடன் நிலுவை அல்லது செலுத்தாமை நிலை**

இயக்குனர் தாம் இயக்குனர் பதவி வகிக்கும் மற்ற பிற நிறுவனங்களின் தீவிரமான நிலைகளான நிதி நிறுவனங்களில் கடன் அல்லது வட்டி தொகை செலுத்தாது அல்லது வைப்பு நிதியை திருப்பிச் செலுத்தாது, வருடாந்திர கணக்குகளை சமர்பிக்காது, இந்திய பங்கு பரிமாற்றம் விதிமுறைகளில் அத்து மீறல் பொருந்தின் அல்லது இது போன்ற நிலைமைகள் இல்லாதிருப்பதை உறுதி படுத்த வேண்டும். இவ்வாறான சூழ்நிலை ஏற்படின் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள குறிப்பிட்ட இயக்குனர் நிறுவனச் செயலரின் உதவியை நாட வேண்டும் மேலும் வாரியத்திற்கு இதைப் பற்றி தெரிவித்திட வேண்டும். வருடாந்திர விதமாக, இதன் தொடர்பாகஉரிய வடிவத்தில் ஒரு உறுதிமொழியை பொருந்தின் நிர்வாகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**4. கையிருப்பு பங்குகள் மற்றும் இயக்குனர் பதவிகள்**

வாரியத்தின் உறுப்பினர்கள் தெரிவிக்க வேண்டியது:

நிறுவனத்தின் மற்றும் அல்லது துணை நிறுவனங்களில் நன்மை தரக்கூடிய பங்குகள் பற்றிய விவரத்தை நியமிக்கப்படும்போது மற்றும் அதற்கு பிறகு வருடத்திற்கு முறை அளிக்க வேண்டும்.

பிறகு, உள்நபர் வர்த்தக நெறிமுறைளின் படி அல்லது பொருந்தும் விதமான ஏதேனும் மாற்றம் இருப்பின் தெரிவிக்க வேண்டும் நியமனத்தின் போது பிற நிறுவனங்களில் வகிக்கும் இயக்குனர் அல்லது கமிட்டி உறுப்பினர் பதவி விவரங்களை அளித்தல்அதன் பின்னர் வருடாந்திர விதமாக அளித்தல் வேண்டும். குறிப்பிட்ட வருடத்திற்குள்ளாகவே ஏதேனும் மாற்றம் இருப்பின் அதனை அவர் நிறுவனத்திற்கு தெரிவித்து அதனை அடுத்து வரும் வாரியக் கூட்டத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்

**3. பங்குதாரர்களுக்கு இயக்குனர்கள் மற்றும் பணியாளர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகள்**

அ. நிறுவனத்தின் பங்குதாரர்களின் அதிகபட்ச நலனை கருத்தில் கொண்டு அதிகபட்ச நேர்மையாக மற்றும் நன்னம்பிக்கையோடு செயல் முடிவுகள் எடுப்பது மற்றும் நியாயமாக செயல்படுவது.

ஆ. நிறுவனம் மற்றும் அதன் பங்குதாரர்களின் சிறப்பான நலனை கவனத்தில் கொண்டு அவர்களின் தனிப்பட்ட தீர்ப்பு பாதிக்காதவாறு கவனம், திறமை மட்டும் நயத்தோடு செயல்பட வேண்டும்

இ. நிறுவனத்தின் புலப்படுகின்ற அல்லது புலப்படாத சொத்துக்களை அவைகள் பாதிக்கப்படாத வகையில் பயன்படுத்துதல் கூடாது மேலும் அவைகளை தற்போதைய நிறுவன அமைப்பினை வாரியம் அல்லது உரிய அதிகாரம் அனுமதி வழங்கப்படாத வரைக்கும் அச்சொத்துகளை தமது சொந்த பயன்பாட்டிற்கு உபயோகித்தல் கூடாது.

ஈ. நிறுவனம் மற்றும் பங்குதாரர்களுக்கு தமது பணியினை எப்போதும் தமது சிறப்பான திறமைகளின் அடிப்படையில் நிறைவேற்ற வேண்டும்.

உ. பங்குதாரரின் மதிப்பை கூட்டுவதில் உறுதி கொண்டிருத்தலும் பங்குதாரர்களின் உரிமைகளை நிர்வகிக்கும் அனைத்து சட்டதிட்டங்களிற்கு எற்ப ஜசிசிஎல் நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும் அவ்வம் முறையான சட்டங்கள மற்றும் ஒப்பந்தங்களிற்கு உட்பட்ட அனைத்து நிபந்தனைகளுக் கொண்ட பங்குதாரருக்கு தொடர்புடைய நிறுவனத்தின் அனைத்து வர்த்தக அம்சங்களையும் பங்குதாரர்களுக்கு உரிய நேரத்தில் நியாயமான முறையில் தெரிவித்துவிடல் வேண்டும்.

ஊ. நிறுவனத்தின் எந்த ஒரு இயக்குனரும் நிறுவனத்தின் உள்நபர் தகவல் எனப்படும் இரகசியமான தகவலை தக்கவைத்து அல்லது பயன்படுத்தி தான் அதன் மூலம் நன்மை பெறுவதோ அல்லது அவர் மூலம் பிறருக்கு நன்மை பெற வைப்பதோ கூடாது. அனைத்து இயக்குனர்களும் பணியாளர்களும் இந்திய பங்கு சந்தை பரிமாற்று ஆணையத்தின் உள்நபர் வர்த்தக வழிகாட்டுதலிற்கு இணங்க பொருந்துமிடத்தில் செயல்பட வேண்டும். எந்த ஒரு இயக்குனரும் அல்லது பணியாளர்களும் குறிப்பிட்ட முறையில் அனுமதி பெறாதவரைக்கும் எந்த ஒரு உள்நபர் தகவலையும் செய்தித்தாள் மற்றும் பொது ஊடகங்களிற்கு வெளியிடுதல் கூடாது.

உள்நபர் தகவல் என்பது கீழ்காணுபவைகளை அடங்கியிருக்கும்

- வர்த்தக அல்லது வர்த்தக பிரிவுகளை விலைக்கு வாங்குதல்
- புதிய பொருட்கள் அல்லது முன்னேற்றங்களைப் பற்றி அறிவித்தல்
- இலாபங்கள், வருவாய் மற்றும் ஊக்கத் தொகை போன்ற நிதி சார்ந்த தகவல்கள்

- சொத்து மறுமதிப்பீடுகள்
- முதலீட்டு முடிவுகள் திட்டங்கள்
- திட்டங்களை மறுவடிவமைத்தல்
- பெரிய அளவு பணி ஒப்பந்தங்கள்
- அதிக நிதியை ஈடுபடுத்தல் கொணர்தல்
- பங்கு மாற்றத்தில் பட்டியலிடப்பட்டிருப்பின் வேறு சில தகவல்களான நிறுவன பங்கின் சந்தை
- மதிப்பை அறிய உதவும் தகவல்
- நிறுவனம் கையொப்பம் மேற்கொண்டுள்ள இரகசியக்காப்பு ஒப்பந்தங்கள் பற்றிய தகவல்

**4. பணியாளர்களுக்கு இயக்குனர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகள்**

அ. தனது பணியாளர்களுக்கு நியாயமான சம்பளம் வழங்குவது

ஆ. பணிபுரியும் சூழ்நிலை பணியாளர்களுக்கு ஆரோக்கியமாக மற்றும் பாதுகாப்பாக அமைத்து வைப்பது

இ. பணியாளர்களுக்கு தொடர்புடைய அனைத்து சட்டவிதிமுறைகளை கண்டிப்பாக கடைபிடிப்பது

ஈ பணியாளர்களை மதிப்போடு நடத்துவது மற்றும் அவருடைய தனிநபர் மற்றும் மனிதஉரிமைக்கு உரிய மதிப்பளிப்பது

உ. நிறுவனத்திற்குள் சட்டத்திற்கு புறம்பான செய்கைகள் நடைபெறின் அவற்றை தெரிவிப்பதில் அனைத்து பணியாளர்களுக்கும் வாய்ப்பளிப்பது

ஊ. பணியாளர்களின் செயல்பாடு, திறமை, தொழில்திறன் மற்றும் செயலாற்றல் அடிப்படையில் ஊக்கத்தொகை அடங்கிய விருதுகள் அளித்து பதவி உயர்வு மற்றும் ஊக்கமளித்தல் வேண்டும்

எ. பணியாளர்களுக்கு அவர்களுடைய அறிவு மற்றும் திறமையை மேம்படுத்த சமமான வாய்ப்புகளை அளிப்பதும், பணியாளர்கள் தங்களது தொழில்சார்ந்த அறிவின் அடிப்படையில் வெளிப்படுத்தும் விமர்சனம் மற்றும் கருத்துக்களை கவனத்தில் கொள்ள வேண்டும்

ஏ. விண்ணப்பிக்கும் தகுதி பெற்றுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இனம், சாதி, மதம், நிறம், பூர்விகம், திருமண அந்தஸ்து, பாலினம், வயது, தாய்நாடு மற்றும் ஊனம் ஆகிய எந்த ஒரு அம்சத்தை முன்னிட்டு பாகுபாடு காண்பிக்காது வேலைவாய்ப்பிற்கு கருதப்பட வேண்டும்.

ஒ. அனைத்து பணியாளர்களுக்கும் கௌவரமாக நடத்தப்பட்டு பணி சூழ்நிலையில் உடல்ரீதியான, வாய்மொழி, மற்றும் மன ரீதியான பாலின தொந்திரவு இல்லாதவாறு பராமரிக்கபப்படத் தேவையான கொள்கைகள் வகுக்கப்பட்டு முறைப்படுத்திருத்தல் வேண்டும்.

ஓ. பணியாளர்களக்குள் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை தாமும் ஈடுபட்டு உருவாக்குதல் மற்றும் கண்காணித்தல்

ஔ. ஐசிசிஎல்லின் பணியாளர் அவர் தனது தனிப்பட்ட வாழ்க்கையில் அவர் விரும்பும் துறையில் கல்வி, சமுக சமுதாய மற்றும் கலாச்சார மற்ற பிற நடவடிக்கைகளில் நிறுவனத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தாத வரைக்கும் அவர் பங்கேற்பதற்கு முழு சுதந்திரம் பெற்றுள்ளார்

**5. வாடிக்கையாளர்களுக்கு இயக்குனர்கள் மற்றும் பணியாளர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகள்**

அ. வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவை அளிப்பது

ஆ. வாடிக்கையாளரோடு ஒத்துக்கொள்ளப்பட்ட வறையரைக்கப்பட்ட நிபந்தனைகளை தீவிரமாக பின்பற்றுதல்

இ. வாடிக்கையாளர் மற்றும் நிறுவனத்தின் நன்மைகளை தொடர்ந்து முன்னேற்றுவதற்கான வழிகளை காணுதல்

உ. வாடிக்கையாளரின் இரகசியங்களை தீவிரமாக பாதுகாத்தல் மற்றும் வாடிக்கையாளர் தனிநபர் அல்லது நிறுவன அல்லது இரண்டும் சேர்ந்திருப்பினும் தம் சுய நலனிற்காக அல்லது தொடர்புடைய மற்றோரது நலனிற்காக வாடிக்கையாளரின் இரகசியங்களை நியாயமற்ற முறையில் பயன்படுத்தல் கூடாது

ஊ.ஒரு வேளை வாடிக்கையாளரின் ஒப்பந்தத்தின் எதாவது நிபந்தனையை நிறைவு செய்ய இயலாத வேளையில் ஒருவருக்கொருவர் திருப்திகரமான தீர்வுகளை காண வாடிக்கையாளருக்கு முன்கூட்டியே தெரிவித்து விடவேண்டும்

**6. பல தரப்பட்ட அரசு அதிகாரங்களுக்கு இயக்குனர்கள் மற்றும் பணியாளர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகள்**

பொதுப்படையாக வெளியிடப்படுகின்ற தகவல் தொடர்புடைய அனைத்து அரசு சார்பான கேள்விகளுக்கும் நேர்த்தியான மற்றும் துல்லியமான பதில்களை இயக்குனர்களும் பணியாளர்களும் அளிக்க வேண்டும் என நிறுவனம் எதிர்பார்க்கிறது. நிறுவனம் அரசு அதிகாரங்களுக்கு உரிய நேரத்தில் முழுவிதமான நியாயமான மற்றும் துல்லியமான தகவலை சமர்ப்பிப்பதை ஏதுவாக்கத் தேவையான தகவலை இயக்குனர்கள் மற்றும் பணியாளர்கள் அளிக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.

**7. நிறுவனச் சட்டம் 1956 ன் அதிகாரம்**

இந்த நெறிமுறைகளில் கொடுக்கப்பட்டுள்ள பிரிவுகளில் ஏதேனும் 1956 நிறுவனச்சட்டத்தின் விதிமுறைகளிற்கு முரணாக இருக்கும் பட்சத்தில் 1956 நிறுவனச்சட்டத்தின் விதிமுறைகள் மற்றும் அதன் வழிகாட்டுதல்கள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும்

**8. இந்த நெறிமுறைகளில் திருத்தம்**

இந்த நெறிமுறைகள் சேர்க்கப்படவோ, திருத்தப்படவோ, அல்லது செல்லாதவையாகவோ இயக்குனர் வாரியத்தால் மட்டுமே செய்ய இயலும். மேலும் அவ்வாறு செய்யப்பட்ட மாற்றங்கள் பொருந்தும் சட்டம் அல்லது நெறிமுறைகளின் படி தேவையாயின் பொதுவாக வெளிப்படுத்தப்பட வேண்டும். ஒரு பொதுவான கொள்கையான இந்த நெறிமுறைகளை வாரியம் செல்லத்தக்கவையாக அறிவிக்காது.

மும்பை

தேதி ஏப்ரல் 1, 2009